

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் சண்டிகர் தமிழ் மன்றத்தின் கட்டட விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள 50 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சண்டிகர் தமிழ் மன்றத்தின் பொதுச் செயலாளர் ராஜசேகர், பொருளாளர் சிவசுப்ரமணியம், இணைப் பொருளாளர் குணசேகரன் ஆகியோரிடம் வழங்கினார். இந்நிகழ்வின்போது, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறைசெயலாளர்வே.ராஜாராமன்மற்றும்தமிழ்வளர்ச்சித்துறைஇயக்குநர்முனைவர்ந.அருள்ஆகியோர்உடனிருந்தனர்.



வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் நேற்று (18.02.2025) சென்னை தலைமைச் செயலகத்தில், 2025–2026ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதிநிலை அறிக்கை தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் வேளாண் உற்பத்தி ஆணையர் மற்றும் அரசுச் செயலாளர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர் பி.முருகேஷ், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை ஆணையர் த. ஆபிரகாம், தலைமைப் பொறியாளர் (வே.பொ) ஆர்.முருகேசன், தலைமைப் பொறியாளர் (வே.பொ) (ந.ப.தி.) சந்திரசேகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை – ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில்

# தேசிய மாற்றுத் திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டி!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்து - அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்!

சென்னை, பிப். 19-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.02.2025) சென்னை ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கத்தில் 23வது தேசிய மாற்று திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியை தொடங்கி வைத்தார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் தமிழ்நாடு பாராலிம்பிக் விளையாட்டு சங்கம் இணைந்து நடத்தும் இப்போட்டி பிப்ரவரி 18 முதல் 20 வரை சென்னையில் ஜவஹர்லால் நேரு விளையாட்ட ரங்கத்தில் நடைபெறவுள்ளது. தேசிய மாற்றுத்திறனாளிகளுக்கான தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் இந்தியா முழுவதிலும் இருந்து 30 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து, 1,476 பாராதடகள வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டு, 155 போட்டிகளில் பங்கேற்கவுள்ளனர். இப்போட்டியில் தமிழ்நாட்டை சேர்ந்த 185 வீரர், வீராங்கனைகள் கலந்து கொள்கின்றனர்.

தொடக்க விழாவில் வீரர், வீராங்கனைகளின் அணிவகுப்பு நிகழ்ச்சியும், அதைத் தொடர்ந்து ஒலிம்பிக் முறையில் இடம் பெற்ற சுடர் ஓட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போட்டிக்கான சுடரை வழங்க பாரீஸ் 2024 பாராலிம்பிக்ஸில் தங்கப் பதக்கம் வென்ற நவ்தீப் சிங் சுடரை மைதானத்தில் ஏற்றிவைத்தார். பாரீஸ் 2024 வெள்ளிப் பதக்கம் வென்ற அர்ஜூனா விருது பெற்ற தமிழ்நாடு பாரா பாட்மிண்டன் வீராங்கனை செல்வி. துளசிமதி முருகேசன் அனைத்து பங்கேற்பாளர்களின் சார்பாக விளையாட்டு வீரர்களின் உறுதிமொழியை வாசிக்க அனைத்து வீரர், வீராங்கனைகளும் பின்தொடர்ந்து உறுதிமொழி ஏற்று கொண்டனர்.

பின்னர் துணை முதலமைச்சர் அவர்கள் தேசிய பாரா தடகள சாம்பியன்ஷிப் போட்டியை துவக்கி வைக்க, விளையாட்டுத் திறன் மற்றும் உணர்வைக் குறிக்கும் வகையில் 500 பலூன்கள் பறக்கவிடப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் தலைவர் பத்ம பூஷன் தேவேந்திர ஜஜாரியா, இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் துணைத் தலைவர் சத்ய பிரகாஷ் சங்வான், இந்திய பாராலிம்பிக் கமிட்டியின் பொதுச் செயலாளர், ஜெயவந்த் குண்டு ஹமானவர், பாரா தடகள விளையாட்டு சங்க தலைவர் சத்ய நாராயணா, அர்ஜூனா விருது மற்றும் பாராலிம்பிக்ஸில் தங்க பதக்கம் பெற்ற பாரா தடகள வீரர் பத்மஸ்ரீ டாக்டர் மாரியப்பன் தங்கவேலு, இந்திய பாரா தடகள வீராங்கனை பத்மஸ்ரீ திருமதி தீபா மாலிக், தமிழ்நாடு பாராலிம்பிக்விளையாட்டு சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.கிருபாகர ராஜா, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பாரா தடகள வீரர், வீராங்கனை கலந்துகொண்டனர்.

### இராணிப்பேட்டை மாவட்டம் முழுவதும்

# முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, பிப்.19-

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் தி.மு.க. செயற்குழு கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் நடந்தது.

மாநில சுற்றுச்சூழலை துணைச் செயலாளர் வினோத் காந்தி , மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர்கள் சிவானந்தம், துரைமஸ்தான், குமுதா குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், க. சுந்தரம், அ.அசோகன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும் கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர். காந்தி கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

அவர் பேசியதாவது:

தமிழக முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் ஆட்சி பொறுப்பேற்று 4வருடம் ஆகிறது. ஒவ்வொருநாளும் ஒவ்வொரு திட்டத்தை முதல்வர் நிறைவேற்றி வருகிறார்.வரும் 2026ஆம்ஆண்டு சட்டமன்ற தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் வெற்றி பெறுவோம்.

வருகிற1ந்தேதி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை ஆடம்பரம் இல்லாமல் மக்கள் பயன் பெறும் வகையில் நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும்.

மாவட்டந்தோறும் கட்சி கொடியினை ஏற்றி வைத்து அன்னதானம்,

வழங்க வேண்டும். மாணவர்களுக்கு நோட்டு புத்தகம், முதியோர் இல்லம்,மனவளர்ச்சி குன்றிய பள்ளி போன்ற இடங்களில் உணவுகள் வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். மருத்துவ முகாம், ரத்ததான முகாம்களை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வதுபிறந்த நாளை முன்னிட்டு கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அனைவரும் சீரிய வகையில் கொண்டாடும் விதமாக திராவிட மாடல் அரசின் சாதனைகள் விளக்கும் பொதுக்கூட்டங்கள் நடத்துவது, கட்சி கொடியேற்றி இனிப்பு வழங்குவது, கண் தானம், ரத்ததானம், மாவட்டம் முழுவதும் ஊர் கிளை, வட்டங்கள் தோறும், ஒவ்வொரு நகர, ஒன்றிய, பேரூர், கழகத்தின் சார்பில் சிறப்பாக விழா நடத்துவது, அரசின் 4ஆண்டு சாதனைகள் குறித்து வீடு, வீடாகச் சென்று திண்ணை பிரச்சாரம் நடத்தி, வரும் சட்டமன்ற தேர்தலில் பா.ஜ.க. மற்றும் அதனோடு மறைமுக கூட்டணியில் இருக்கும் அ.தி.மு.க.வை முழுமையாக வீழ்த்தி "வெல்வோம் 200 படைப்போம் வரலாறு" என்கிற நம் தலைவர் தளபதி முகஸ்டாலின் எண்ணத்தை நிறைவேற்றுவோம். தளபதி மு.க.ஸ்டாலின் பிறந்தநாள் முன்னிட்டு சனி, ஞாயிறு அன்று மருத்துவ முகாம் நடத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நிகழ்ச்சியில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எஸ்.விநோத், மாவட்ட சிறுபான்மை நல உரிமை பிரிவு அமைப்பாளர் இசட் அப்துல்லா மற்றும் மாவட்ட கழக, தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள், நகர கழக, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### திருப்பத்தூர் – கந்திலி உள்ளிட்ட இடங்களில் உள்ள

# 10 மேல் நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நல உதவிகள்!

## சட்டமன்ற உறுப்பினர் அ.நல்லதம்பி வழங்கினார்!

திருப்பத்தூர், பிப். 19 -

திருப்பத்தூர் சட்டமன்றதொகுதி சட்டமன்ற உறுப்பினர் நல்லதம்பி தொகுதி இளைஞர்கள், மாணவ, மாணவியர் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்றார். தொகுதியில் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையில் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி வகுப்புகள் ஜவ்வாதுமலை புதூர்நாடு வனத்துறை மேல் நிலைப்பள்ளி, திருப்பத் தூர்நகரம் குட்வில் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆகியவற்றில் இரண்டு பயிற்சி மையங்களை தனது சொந்த செலவில், அனுபவம் வாய்ந்த பயிற்றுநர்களைக் கொண்டு நடத்திவருகின்றார். இதில் 300க்கும் மேற்பட்டோர் பயின்று வருகின்றார்.

அதனை தொடர்ந்து வருகின்ற மார்ச் மாதம் மேல்நிலை வகுப்பிற்கான பொதுத்தேர்வு நடக்க உள்ள நிலையில் திருப்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட மேல்நிலைப்பள்ளிகளுக்கும் சென்று 2500க்கும் மேற்பட்ட +2 மாணவ மாணவிகளை சந்தித்து மேல்நிலை வகுப்பிற்கு பிறகு என்ன படிக்கலாம். என்ற கையேடு, பேனா, பென்சில், ஸ்கேல், நோட்டுபுத்தகம் உள்ளிட்ட எழுதுபொருள் உபகரணங்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கி தேர்வில் நல்ல மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றிட வாழ்த்தினார்.

கந்திலி ஒன்றியத்தின் கசிநாயக்கன்பட்டி, குனிச்சி, பெரியகண்ணாலப்பட்டி, நத்தம், சுந்தரம் பள்ளி, திருப்பத்தூர் நகரத்திற்குட்பட்ட அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, மீனாட்சி பெண்கள் மேல்நிலைப்பள்ளி, மாதிரிப் பள்ளி, மேரிஇமாகுலேட் பெண்கள் மேல்நிலைப் பள்ளி, இராமகிருஷ்ணா மேல்நிலைப்பள்ளி ஆகியவற்றில் பயிலும் மாணவ மாணவிகளை சந்தித்து நல உதவிகள் வழங்கினார்.

அந்தந்த பள்ளி தலைமையாசிர்கள், தலைமையில் நடந்த இந்த நிகழ்ச்சிகளில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள், கந்திலி ஒன்றியக் குழு தலைவர். திருமதி திருமுருகன், தலைமைசெயற்குழு உறுப்பினர்.கு.இராஜ மாணிக்கம், பொதுக்குழு உறுப்பினர்.சு.அரசு ஒன்றிய செயலாளர்கள். கே. ஏ.குணசேகரன், கே.முருகேசன், கே. எஸ்.ஏ.மோகன்ராஜ், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஆர்.தசரதன், ஊராட்சிமன்ற தலைவர்கள். விஜய லட்சுமி கருணாநிதி, குமார், நடராஜ், நகர மன்ற உறுப்பினர்கள். கோபிநாத், ஜீவிதா பார்த்திபன் கலந்து கொண்டனர். சட்டமன்ற உறுப்பினருக்கு மாணவமாணவிகள் மானமார்ந்த நன்றியை தெரிவித்தனர்.

# பெரம்பூர் வடக்குப் பகுதிக் கழகச் செயற்குழுக் கூட்டம்!

## பகுதிச் செயலாளர் அ.முருகன் அறிவிப்பு!

சென்னை, பிப்.19-

பெரம்பூர் வடக்கு பகுதி செயலாளர் அ.முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு

பெரம்பூர் வடக்கு பகுதி கழக செயற்குழு கூட்டம் 20.02.2025 வியாழக்கிழமை மாலை 5 மணி அளவில் எண் :557, கிழக்கு அவன்யூ சாலை, எம்கேபி நகர், முல்லை நகர் பஸ் நிலையம் அருகில் அமைந்துள்ள எம். எஸ் திருமண மண்டபத்தில் பகுதி அவை தலைவர் அ.ஜியாவுதீன் தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு பகுதி கழக நிர்வாகிகள் இரா. லீலா வேலு, எம். லதா, ஏ. செந்தூ பாண்டியன் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொறுப்பாளரும் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினருமான ஆர்.டி.சேகர் மற்றும் தொகுதி பொறுப்பாளர் கன்னிகை கோ. ஸ்டாலின் கலந்துகொண்டு உரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், தலைமை செயற்குழு உறுப்பினர் மாவட்ட நிர்வாகிகள், பொதுக்குழு உறுப்பினர், மாமன்ற உறுப்பினர், வட்டச் செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதிக்கு உட்பட்ட மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள், பகுதிகளின் அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் மார்ச் 1 பிறந்தநாள் விழா, 2.இல்லம் தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்த்தல், 3.பூத் கமிட்டி உறுப்பினர்கள் அறிமுக கூட்ட ஏற்பாடு.

இவ்வாறு அ.முருகன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# தி.மு.க. வர்த்தகர் அணி

## மாவட்ட, மாநில அமைப்பாளர் - தலைவர்கள் கூட்டம்!

### தி.மு.க. வர்த்தகர் அணிச் செயலாளர் கவிஞர் காசிமுத்துமாணிக்கம் அறிவிப்பு!

தி.மு.க. வர்த்தகர் அணி மாவட்ட, மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் கூட்டம் 23-2-2025 ஞாயிறு அன்று காலை 11.00 மணியளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், எனது தலைமையில், வர்த்தகர் அணி துணைத் தலைவர்கள் கே.எஸ்.மூர்த்தி, முனைவர் கோவி. செழியன், பழஞ்சூர் கே.செல்வம், வர்த்தகர் அணி இணைச் செயலாளர்கள் மாலைராஜா, வி.ஜெயன், கோவை நா. முருகவேல், பி.டி. பாண்டிச்செல்வம், எஸ். முத்துச்செல்வி, என். தாமரைபாரதி, எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், வர்த்தகர் அணித் துணைச் செயலாளர்கள் ஐ. கென்னடி, டி.ஆர். முத்துச்சாமி, எம்.எஸ். அசோக் பாண்டியன், மீஞ்சூர் கே.ஜி.பாஸ்கர்சுந்தரம், சிவகாசி த. வனராஜ், வி.பி. மணி, இ.ராமர், க. தனசெல்வம், பெ. சுந்தரவரதன், வே.பல்லவிராஜா, வி.எஸ்.ராமகிருஷ்ணன், பி.தர்மசெல்வன், ஆ.சத்தியமூர்த்தி, குன்னம் ராஜேந்திரன், கிருஷ்ணகிரி கே.வி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் முன்னிலையிலும் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாவட்ட மற்றும் மாநில அமைப்பாளர்கள் - தலைவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள் விழா.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2025

**காசி முத்துமாணிக்கம்**
செயலாளர்,
தி.மு.க. வர்த்தகர் அணி.

# தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கூட்டம்!

### விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி மாநில நிர்வாகிகள் கலந்தாலோசனைக் கூட்டம் வருகிற 21.2.2025 - வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விவசாயத் தொழிலாளர் அணித் தலைவர் உ.மதிவாணன் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

பொருள்: 1. முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் பிறந்த நாள்

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 18.02.2025

**அன்னியூர் சிவா,**
செயலாளர்,
தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி.

# சைதை மேற்குப் பகுதிக் கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம்!

## பகுதிக் கழகச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, எம்.சி., வேண்டுகோள்!

சென்னை, பிப்.19-

சைதை மேற்குப் பகுதி கழக செயலாளரும், பத்தாவது மண்டலக் குழு தலைவருமான எம்.கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

சென்னை தெற்கு மாவட்டம், சைதை மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் பகுதி அவை தலைவர் களக்காடி எல்லப்பன் தலைமையிலும், பொதுக்குழு உறுப்பினர்கள் சைதை மா.அன்பரசன், வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன், பகுதி கழக நிர்வாகிகள் த.சம்பத், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், வி.பி.ஜானகிராமன் ஆகியோர் முன்னிலையில் சைதாப்பேட்டை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் இன்று (19.2.2025 புதன்கிழமை) மாலை 5 மணியளவில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்திற்கு கழக மாநில நிர்வாகி, வட்டக் கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், அனைத்து அணிகளை சார்ந்த மாவட்ட அமைப்பாளர்கள், மாவட்ட துணை அமைப்பாளர்கள், பகுதி அமைப்பாளர்கள் ஆகியோர் இக்கூட்டத்திற்கு குறிப்பிட்டுள்ள நிர்வாகிகள், குறிப்பிட்ட நேரத்திற்குள் தவறாமல் கலந்துகொண்டு சிறப்பித்து தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: 1. கழக தலைவர், தமிழக முதல்வர் மார்ச் 1 பிறந்தநாளை முன்னிட்டு.

2. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு பகுதிச் செயலாளர் எம்.கிருஷ்ண மூர்த்தி கேட்டுக் கொண்டுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி அரசு மருத்துவமனையில் தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் கீழ் சிறுபான்மையினர் நலன் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் காசநோய் கண்டறியும் அதி நவீன கருவி (CBNAAT) ஆய்வகத்தினை திறந்து வைத்து பார்வையிட்டார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் ச.கந்தசாமி, இணை இயக்குநர் நலப் பணிகள் சேகர், துணை இயக்குநர் காசநோய் சங்கீதா, ஆவடி மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், ஆவடி மண்டல குழு தலைவர்கள் ஜி.ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், அம்மு விஜயன், ஜோதிலட்சுமி நாராயண பிரசாத், பகுதிச் செயலாளர்கள் பேபிசேகர், பொன்.விஜயன், நாராயண பிரசாத், ஆவடி அரசு மருத்துவமனை முதன்மை மருத்துவர் காவலன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்,



இராணிப்பேட்டைமாவட்டதி.மு.க.அலுவலகத்தில்நடந்தஅவசரசெயற்குழுகூட்டத்தில் கைத்தறிமற்றும்துணிநூல்துறைஅமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி பேசினார். மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாநில சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் ஆர்.விநோத்காந்தி, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., மாவட்ட துணை செயலாளர்கள் சிவானந்தம், துரை மஸ்தான், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், அ.அசோகன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.